செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 61 நாள்: 01/2/19

# பத்திரிகைச் செய்தி

வேலூர் மாவட்டத்தின் தலைமை நகரமாகிய வேலூர், நகராட்சியாக இருந்த காலத்தில் இருந்தே, வேலூர் மாவட்டம், வேலூர் தாலுக்கா, சதுப்பேரி வருவாய் கிராமம், சதுப்பேரி, புல எண் SF No.366/5, 366/7B,366/8, 366/18 368/1, 368/2, 364/5,-ல், 7.89 ஏக்கர் பரப்பளவு கொண்ட உரக்கிடங்கில் வேலூர் நகராட்சிப் பகுதியில் சேகரமாகும் திடக்கழிவுகள் கடந்த 100 ஆண்டுகளுக்கு மேலாக கொட்டப்பட்டு வந்தது. வேலூர் நகராட்சி 2008 ஆம் ஆண்டு மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட பின்பும், வேலூர் மாநகராட்சி பகுதியில் உள்ள 60 வார்டுகளில் சேரமாகும் சுமார் 200 மெட்ரிக் டன் குப்பை தொடர்ந்து சதுப்பேரி குப்பை கிடங்கில் கொட்டப்பட்டு வந்தது. இந்நிலையில், 2015 செப்டம்பர் மாதம் முதல் சதுப்பேரி கிராம பொதுமக்கள் இந்த குப்பை கிடங்கில் குப்பையை கொட்டக்கூடாது என தொடர் போராட்டம் நடத்தி வந்தனர். மேலும், இப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள் சதுப்பேரி குப்பை கிடங்கில் குப்பை கொட்டுவதை தடை செய்ய கோரி தென்மண்டல தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் வழக்கு தொடர்ந்தனர். சதுப்பேரி பொதுமக்கள் தென்மண்டல தேசிய பசுமை தீர்பாயத்தில் தொடர்ந்த வழக்கின் மீது 21.11.2016 அன்று பிறப்பித்த தீர்பாணையில், சதுப்பேரி குப்பை கிடங்கில் வேலூர் மாநகராட்சியால் குப்பை கொட்டுவது நிறுத்த வேண்டும் என உத்திரவிடப்பட்டது. சதுப்பேரி கிராமத்தை சேர்ந்த பொதுமக்கள் போராட்டம் மற்றும் தேசிய பசுமை தீர்ப்பாயம் பிறப்பித்த உத்திரவு ஆகியவற்றை தொடர்ந்து, வேலூர் மாநகராட்சி மண்டலம் I, காந்திநகர் பகுதியில் 2015 ஆம் ஆண்டு முதன் முதலாக சிறிய அளவில் குப்பை கையாண்டு உரம் தாயாரிக்கும் மையம் தொடங்கி செயல்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது. காந்தி நகர் குப்பை உரம் தயாரிக்கும் மையத்தில், வார்டு எண் 9 மற்றும் 12 ஆகிய 2 வார்டுகளில் சேகரமாகும் 3 மெட்ரிக் டன் குப்பை தரம் பிரிக்கப்பட்டு, மட்கும் குப்பையிலிந்து உரம் தயாரிக்கும் பணியும், மட்காத மறு சுழற்சி செய்யக்கூடிய குப்பையை விற்பனை செய்யும் நடவடிக்கையும், மட்காத மறு சுழற்றி செய்ய இயலாத குப்பையை, இறுதியாக்கம் செய்யும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

காந்தி நகரில் சிறிய அளவிலான குப்பை உரம் தயாரிக்கும் மையத்தின் சிறப்பான செயல்பாட்டை தொடர்ந்து, வேலூர் மாநகராட்சி பகுதியில் மேலும் 35 சிறிய அளவிலான குப்பை உரம் தயாரிக்கும் மையங்கள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, அதற்கான கட்டுமானப்பணிகள் முடிக்கப்பட்டு மொத்தமுள்ள 36 மையங்களிலும் அந்தந்த பகுதிகளில் சேகரமாகும் குப்பை தரம் பிரிக்கப்பட்டு குப்பை உரம் தயாரிக்கும் பணி நல்ல முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த 36 குப்பை உரம் தயாரிக்கும் மையங்களிலும் மாநகராட்சியில் உள்ள 60 வார்டுகளில் சேகரமாகும் 200 மெட்ரிக் டன் திடக்கழிவில் 155 மெட்ரிக் டன் திடக்கழிவு கையாளப்பட்டு இறுதியாக்கம் செய்யப்பட்டு வந்த நிலையில், மீதமுள்ள

30 மெட்ரிக் டன் குப்பையையும் விஞ்ஞான முறையில் கையாள உத்தேசிக்கபட்டு, கூடுதலாக ரூ.300.00 இலட்சம் மதிப்பீட்டில் 6 குப்பை உரம் தயாரிக்கும் மையங்கள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அவற்றில் 2 மையங்கள் செயல்பாட்டிற்கு, கொண்டுவரப்பட்டுள்ளன.

தற்போது இம்மாநகராட்சி பகுதியில் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ள 38 சிறிய அளவில் குப்பை உரம் தயாரிக்கும் மையங்களில் சுமார் 165 மெட்ரிக் ட்ன் குப்பை கையாளப்பட்டு இறுதியாக்கம் செய்யப்பட்டு வருகிறது. இம்மாநகராட்சி பகுதியில் கூடுதலாக 4 சிறிய அளவிலான குப்பை உரம் தயாரிக்கும் மையங்கள் ஒரு வார காலத்திற்குள் செயல்பாட்டிற்கு கொண்டு வர உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த 4 மையங்கள் செயல்பாட்டிற்கு வந்தவுடன் விஞ்ஞான ரீதியாக இறுதியாக்கம் செய்யாமல் எஞ்சியுள்ள 20 மெட்ரிக் டன் குப்பையும் விஞ்ஞான ரீதியாக கையாளப்பட்டு இறுதியாக்கம் செய்யப்படும். வேலூர் மாநகராட்சியில் 38 சிறிய அளவில் குப்பை உரம் தயாரிக்கும் மையங்கள் சிறப்பாக செயல்பட்டு வரும் நிலையில், கூடுதலாக 4 மையங்கள் ஒரு வார காலத்தில் செயல்பாட்டிற்கு கொண்டு வர உத்தேசிக்கப்பட்டுள்ளதால், பொதுமக்கள் கோரிக்கையின் படியும், தேசியப் பசுமை தீர்ப்பாய உத்திரவுபடியும், 01.02.2018 முதல் சதுப்பேரி உரக்கிடங்கில் வேலூர் மாநகராட்சியால் குப்பை கொட்டுவது நிறுத்தப்பட்டுள்ளது என்பது தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. இதன் மூலம் சதுப்பேரி பகுதி பொதுமக்களின் 100 ஆண்டு கால பிரச்சனைக்கு நல்ல தீர்வு காணப்பட்டுள்ளது.

எனவே, வேலூர் மாநகராட்சி பகுதியிலுள்ள பொதுமக்கள், வர்த்தக நிறுவனங்கள் மற்றும் இதர அமைப்புகள் தங்களது வளாகத்திற்குள் சேகரமாகும் / உருவாகும் திடக்கழிவுகள், மட்கும் கழிவுகள், மட்காத கழிவுகள் என தரம் பிரித்து முடிந்தவரை அந்தந்த வளாகத்திற்குள்ளேயே கையாண்டு இறுதியாக்கம் செய்யவும், அவ்வாறு அதற்கான வசதி இல்லாத குடியிருப்புகள் / இதர வளாகங்கள் தரம் பிரிக்கப்பட்டட குப்பையை மாநகராட்சி பணியாளரிடம் வழங்கி மாநகர மேம்பாட்டிற்கும் சுற்றுச்சூழல் மேம்பாட்டிற்கும் தகுந்த ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

7/2/18

மாவட்ட ஆட்சி தலைவர்
வேலூர் மாவட்டம்

செ.ம.தொ.அ. வேலூர்-1 2/2/2018.